10.03.2026 OS.No.120/2024 PW1 Name :.**தோரளி**

குறுக்கு விசாரணை

1. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு முழுமையாக தெரியாது. பிரதிவாதிகள் சின்னவட்டனூர் பூங்காபட்டு நாட்டை சார்ந்தவர்கள். என்னுடைய ஊரிலிருந்து அது சுமார் 7, 8 கி.மீ தொலைவு இருக்கும் நான் விவசாயம் செய்கிறேன். எனக்கு தமிழ் எழுதபடிக்க தெரியாது. பிரதிவாதிகள் கடனுறுதி சீட்டுகளை வாங்கி வந்தார்கள். குடும்ப செலவிற்காக பிரதிவாதிகள் என்னிடம் கடன் வாங்கினார்கள். எந்த இடத்தில் கடன் பணத்தை கொடுத்துள்ளேன் என்பதை வழக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்று தெரியவில்லை.
2. தாவா கடனுறுதி சீட்டுகள் தமிழில் எழுதபட்டுள்ளதா அல்லது ஆங்கிலத்தில் எழுதபட்டுள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. பிரதிவாதிகளுக்கு நான் கடன் பணத்தை ரொக்கமாக கொடுத்தேன். அது என்னுடைய விவசாய தொழில் மூலம் கிடைத்த வருமானம் ஆகும். பிரதிவாதிகள் கடனுறுதி சீட்டில் தமிழில் கையெழுத்து போட்டுள்ளார்களா அல்லது ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டுள்ளார்களா என்று தெரியவில்லை.
3. கடனுறுதி சீட்டுகளில் எத்தனை ரெவின்யூ ஸ்டேம்பு ஒட்டபட்டுள்ளது என்பது தெரியவில்லை. கடனுறுதி சீட்டுகளை பாலகிருஷ்ணன் எழுதியுள்ளார். சாட்சிகளின் பெயர் தற்போது நியாபகம் இல்லை. கடனுறுதி சீட்டுகளில் உள்ள மேற்குறிப்புகளில் யார் வரவு வைத்து

எழுதினார்கள் என்று நியாபகம் இல்லை. அப்போது யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்று நியாபகம் இல்லை. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதில் விவரம் தெரியாது. அதில் கூறியுள்ள சங்கதிகள் தற்போது நியாபகம் இல்லை. பிரதிவாதிகள் கடன் பணத்தை திருப்பி கொடுத்துள்ளதாக பொய்யாக கூறுகிறார்கள்.

4. வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு கொடுத்தேன். பிரதிவாதிகள் அதன்பின் என்னை நேரில் வந்து சந்திக்கவில்லை. பிரதிவாதிகளிடமிருந்து பணம் பறிப்பதற்காக மோசடியாக இந்த வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டுகளில் உள்ள கையெழுத்து பிரதிவாதிகளுடையது கிடையாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தான் அதில் கையெழுத்து போட்டுள்ளார்கள். கடனுறுதி சீட்டுகள் எழுதிய இடத்தில் தான் அதில் கையெழுத்து போட்டார்கள். கடனுறுதி சீட்டுகள் எழுதிய சமயத்தில் நான் பணம் கொடுத்துள்ளேன்.
5. பிரதிவாதிகளின் கையெழுத்திற்கு ஆதரவாக வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. கடனுறுதி சீட்டுகளில் உள்ள கையெழுத்துகள் பிரதிவாதிகளுடையது கிடையாது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் சொத்து காட்டகூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. அறிவிப்பு பெற்றபின் பிரதிவாதிகள் என்னை வந்து பார்க்கவில்லை. வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பொய்யானவை என்றால் சரியல்ல.
6. பிரதிவாதிகளை தவிர வேறு நபர்களுக்கும் நான் பணம் கடன் கொடுத்துள்ளேன். வட்டிக்கு பணம் கொடுத்துள்ளேன். அவர்கள் பணத்தை திருப்பி கொடுத்து விட்டார்கள். சுமார் 15 ஆண்டுகளுக்கு

மேல் பிரதிவாதிகளை தெரியும். வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 10/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE,
VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.10
16:12:51 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.